
ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீஸைலேச தயாபாத்ர வைபவம்.

இஃது

ஸ்ரீவிசிஷ்டாத்வைத சித்தாந்த ஸ்தாபநாசார்யரும்

உபய வேதாந்தாசார்யருமாய் எழுந்தருளியிருக்கும்

சிங்கிரக்குடி

அத்தங்கி திருமலே குமார

**ஸ்ரீமத் சிங்கராசார்யரின்**

திருவடி சம்பந்திகளில் ஒருவரும்

புதுவையைச் சார்ந்த அரியாங்குப்பம்

ஸ்ரீமத் நம்மாழ்வார் சபையின்அங்கத்தினரில்

ஒருவருமான

**துரைரங்க ராமாநுஜதாஸரால்**

பிரசுரிக்கப்பெற்றது.

விக்ரம ஐப்பிசி மூலம்

Censure N° 41 புதுவை லிபர்ட்டி பிரஸ்

http://acharya.org

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆசாரியன் திருவடிகளே சரணம்.

# ஸ்ரீசைலேச தயாபாத்ர வைபவம்.

## ஜீயர் திருவடிகளே சரணம்,

"மன்னுயிர்காள்! இங்கே மணவாள மாமுனிவன்
பொன்னடியாம் செங்கமலப் போதுகளை—யுன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக்
கரத்தாலே தீண்டல் கடன்."

ஆத்திகர்காள்! ஸ்ரீவைணவசமய குரவர்களாகிற ஆழ்வா ராசாரியர்களின் அருளிச்செயல்களை யோதத் தொடங்குகையிலும், திருமணிடுகையிலும், மற்றும் பல்வேறு சமயங்களிலும் வட மொழியால் அமைந்துள்ள

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்॥

என்பதொரு சுலோகத்தை ஸத்ஸம்ப்ரதாய வைணவர்களாகும் நாமனைவரும் சொல்லிவருகின்றோம்.

http://acharya.org

இப்பாசுரம் மிகப்பல நன்மைகளை யருளவல்ல மிக்க சீர்மையுள்ளதொரு திருமந்திரம் என்று அறிஞர் கூறியுள்ளனர். "மந்த்ரத்திலும் மந்த்ரத்துக் குள்ளீடான வஸ்துவிலும் மந்த்ர ப்ரதனை ஆசார்யன் பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் கார்யகரமாவது" என்பது பெரியோர் உபதேசம். ஆதலால், இந்த "ஸ்ரீசைலேச" மகாமந்திரத்திலும், இதனால் சொல்லப்படும் தேவதையினிடத்திலும், இதை யருளிய பரம காருணிகரிடத்திலும் நமக்கு அன்பு கனக்க உண்டாதல் வேண்டும். அந்த அன்பு உதிப்பதற்கு நாம் அத்திருமந்திரத்தினுடைய பொருளை யறிதல் அவசியம். ஆகையால், "ஸ்ரீசைலேச" மந்திரத்தின் பொருள் யாது, இதனால் சொல்லப்படும் தேவதை யெது, இதை யருளிய பரம காருணிகர் யாவர், இது எக்காலத்தில், எச்சமயத்தில், எந்நிமித்தமாக அவதரித்தது என்பதை ஆராய்வோம். ஆசாரியன் அருள்புரிவானாக.

"பொங்கோதஞ் சூழ்கின்ற புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய திருவரங்கச் செல்வனா"ர்க்கும் மற்றுந் திருவுடை ஸத்ஸம்ப்ரதாய ஸ்ரீவைணவர்கள் அனைவருக்கும் பரமகுருவாய் விளங்கி வருபவர் மணவாளமாமுனிகள். இவர் அழகியமணவாள நாயனார், பெரியஜீயர், வரவரமுநி, வரயோகி, ஸௌம்ய ஜாமாத்ரு யோகீந்த்ரர், ரம்யஜாமாத்ரு முநீந்த்ரர், யதீந்த்ர ப்ரவணர், ராமாநுஜன் பொன்னடி, அழகிய மணவாள ஜீயர், ஜீயர் என்னும் இத்திருநாமங்களையுடையவர்.

http://acharya.org

இம்மகா புருடர் திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியில், கலியுகாதி நாலாயிரத்து நானூற்றெழுபத்திரண்டாவதான ஸாதாரண வருடத்தில், ஐப்பிசிமாதத்தில், மூலநக்ஷத்திரத்தில் திருவவதரித்தருளினவர். இவரது தந்தை பெயர் திருநாவீறுடைய பிரான் தாதரண்ணர் என்பது. கோமடம் என்னுங் குடியே இவரது குடி. இவர் சாக்ஷாத் திருவனந்தாழ்வானுடைய திருவவதாரம். இவர் தோன்றிய நாளை

"செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்
(திடுநாள்
சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடுநாள்
மந்தமதிப்புவி மானிடர் தங்களை வானி லுயர்த்திடுநாள்
மாசறு ஞானியர் சேரெதிராசர்தம் வாழ்வு முளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில்சூழ்குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்
காரமர்மேனி யரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில்சீர் மணவாள முனிப்பர னவதாரஞ் செய்திடுநாள்
அழகுதிகழ்ந்திடு மைப்பிசியில் திருமூலம தெனுநாளே!

என்று கொண்டாடி வருகின்றனர்.

மணவாள மாமுனிகள் தமது தந்தையாரிடத்திலே சகல கலைகளையும் உணர்ந்து ஞான பக்தி விரக்தி சீலரானார். பிறகு, திருவாய்மொழிப்பிள்ளை யென்னும் மகதாசாரியன் திருவடிகளை யடைந்து அவரால் ஸதாசாரியர்பால் பெறத்தக்க பல விசேஷார்த்தங்களையும் அநுக்கிரகிக்கப் பெற்றார். அவரது நியமனப்படி ஆழ்வார்களின் ஈரச்சொற்க

http://acharya.org

ளின் அநுபவமொன்றிலேயே யன்றி, திருவாய்மொழிக்கு ஈடுமுதலான ஐந்து வியாக்கியானங்களையும் ஓதிவல்லவராய் "முப்பத்தாறாயிரப் பெருக்கர்" என்று உலகம் போற்றும் கீர்த்தியினராயினர்.

திருவாய் மொழிப்பிள்ளை தாமே உகந்து "உடையவர் திருவடிகளே உமக்கு உபாயமும் உபேயமும்" என்று காட்டிக்கொடுக்க, அந்த மாறனடி பணிந்துய்ந்த எம்பெருமானார் திருவடிகளிலே அந்தரங்க ப்ரீதியுடையவராய் "யதீந்த்ர ப்ரவணர்" என்கிற திருநாமத்தைப் பெற்று, அவர் விஷயமாக "யதிராஜ விம்சதி" யென்னும் ஸ்தோத்திரத்தையும் அருளிச் செய்தனர்.

இவரது வைபவத்தை யறிந்து "பொன்னடிக்கால் ஜீயர்" என வழங்கும் ஸ்ரீவானமாமலை ராமாநுஜ ஜீயர் முதலான பல மகான்கள் இவர் திருவடிகளை யடைந்தனர்.

திருவாய் மொழிப்பிள்ளை தமது சரம தசையில் நியமித்திருந்தவாறு, இவர் ஆழ்வார் திருநகரியை விட்டு ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளி, நம்பெருமாள் கடாக்ஷத்தைப் பரிபூர்ணமாகப் பெற்றார். அவரை மங்களாசாஸனஞ் செய்துகொண்டு, "ரகஸியம் விளைந்த மண்" ணாகிற பிள்ளையுலகாசிரியர் திருமாளிகையிலே நாடோறும் எழுந்தருளி இரகசியக் கிரந்த பிரவசனஞ் செய்துகொண்டு, தம்முடைய நிஜரூபமான ஆதிசேடனும் அளவிட்டுச் சொல்லவொண்ணாத எண்ணில் பல்குணங்களோடு பிரகாசித்துத் தரிசனத்தை நிருவகித்து வந்தனர்.

http://acharya.org

பிறகு, திவ்யதேச யாத்திரைக் கெழுந்தருளி, வழியடைவிலே பல திருப்பதிகளையுஞ் சேவித்து, ஸ்ரீபெரும்பூதூர் சென்று எம்பெருமானாரைத் திருவடிதொழுது விடைபெற்று, கச்சி நகரில் கிடாம்பி நாயனார் பக்கல் ஸ்ரீபாஷ்யத்தை அதிகரித்தார். அவர் விருப்பத்தின்படி தமது நிஜரூபத்தை யவருக்குக் காண்பித்தருளினார். பின்பு, சில மகான்கள் அபேக்ஷிக்க, அங்கு யதோக்தகாரி யெம்பெருமான் சந்நிதியிலே ஓராண்டு ஸ்ரீ பாஷ்யத்தை அனைவரும் வியக்கும்படி பிரவசனஞ் செய்தருளி, மீண்டும் அரங்க நகர் அடைந்தனர்.

அக்காலத்திலே, தம்முடைய பந்துக்களில் ஒருவருடைய மரணத்தால் ஒரு நாள் பகவத் ஸேவைக்குப் பங்கம்நேர, அதனால், பரிகரங்கள் எல்லாம் பகவதநுபவ விரோதிகளாய்ப் பிரதிகூலங்களாயிருப்பதை உத்தேசித்து, உடனே, சருவஸங்கப் பரித்யாக பூர்வகமாக ஸந்நியஸித்தருளி, த்ரிதண்ட காஷாயாதிகளைத் தமக்கு ஸப்ரஹ்மசாரியான சடகோப ஜீயர் திருக்கைகளாலே ஸாதிக்கத் தரித்து, அழகிய மணவாள ஜீயர் என்னும் பெயர் புனைந்தார். அரங்கன் ஆணைப்படி பல்லவராயன் மடத்தில் எழுந்தருளியிருந்து, திருவாய்மொழியினுடைய ஈடு முதலான வியாக்கியானங்களையும் மற்றுமுண்டான அருளிச்செயல் வியாக்கியானங்களையும், ஸ்ரீவசனபூஷணம் முதலான திவ்விய இரகசிய அர்த்தங்களையும் பிரசாதித்துக் கொண்டு தேசிக ஸ்ரீயோடு ப்ரகாசித்து வந்தனர்.

http://acharya.org

ஜீயருடைய அப்ரதிம வைபவாதிசயத்தை யறிந்த அனைவரும் "எம்பெருமானாருடைய அவதாரமே யிவர்" என்றறுதியிட்டு, அவர் திருவடிகளிலே ஆச்ரயித்து, அதிவிலக்ஷணராயினர். அவர்களுள் ப்ரதானர்:

1° ஜீயர் திருக்காவேரியில் நீராடிய ப்ரவாக தீர்த்தத்திலே நீராடிவந்து, அதனாலே ஞானோதயம் பெற்ற திருமஞ்சனம் அப்பாவும்;

2° மழையில் நனைந்திருந்த ஜீயரது திருவடிநிலைகளைத் தமது சிரத்திலணிந்து அதனடியாக ஞானோதயம் பெற்ற அப்பாச்சி யார்மையாரும்;

3° ஜீயர் மடத்திற்குக் காய்கிழங்குகளைச் சமர்ப்பித்து, அவர் கடாக்ஷத்திற் கிலக்காய்ச் சித்த சுத்தி யடைந்த சிங்கரையரும்;

4° அப்பாச்சியார் சம்பந்தத்தாலும், சிங்கரையர் வாயிலாகவும் பெரியபெருமாள் கனவில் தோற்றிய காக்ஷியாலும் ஜீயரது வைபவத்தையும் அவதார ரகசியத்தையும் அறிந்தவரும் முதலியாண்டான் திருவம்சத்தவருமான கந்தாடையண்ணனும், அவர் தம்பியர் கந்தாடையப்பனும் திருக்கோபுரத்து நாயனார் பட்டரும், அவரது சுற்றத்தார் நூற்றிருபது திருநாமங்களும், உத்தம நம்பியும்;

5° கந்தாடையண்ணனுக்கு மிக்க பரிவரும் இதபரருமான சுத்தஸத்வம் அண்ணனும்;

http://acharya.org

6° அப்பாச்சியார் புத்திரர்களான அப்பாச்சி யாரண்ணாவும் தாசரதி யப்பையும் ஆவர்.

இவ்விருவர்களையும் ஸ்ரீவானமாமலை ராமாநுஜ ஜீயருக்கும் முதலியாண்டான் திருவம்சத்தில் ஸம் பந்தம் உண்டாகவேண்டுமென்று ஜீயர் திருவுள்ளம் பற்றி, அவர் திருவடிகளுக் கனுக்க ராக்கினார்.

அக்கால், தமது பௌத்ரர்களாகிற அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் (இவருக்கு "ஜீயர் நாயனார்" என்றுந் திருநாமம்) பெரியாழ்வாரும் (ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்தமையால் இவருக்கு இத்திருநாமம் ஜீயரால் சாத்தப்பட்டது) ஜீயர் திருவடிகளை ஆசிரயித்தனர். அவர்களுள் ஜீயர் நாயனாரை தரிசன ப்ரவர்த்தகராக ஜீயர் கடாக்ஷித்தருளினர்.

பிறகு, தாம் பிறந்த அகமான ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளி, திருநாராயண புரத்து ஆயி பக்கல் "ஆசார்யஹ்ருதய ரஹஸ்யங்களை" யறிந்து பெருங் கீர்த்தியுடன் சிறிது காலம் அங்கு ஒளிர்ந்தனர். அவர் வைபவத்தைப் பொறாத சிலர், ஓரிரவில், அவர் எழுந்தருளியிருந்த மடத்தின் கூரையைத் தீக்கிரையாக்கினர். அவர் தமது சேஷ வடிவத்துடன் வெளிச்சென்று, அக்கொடியவர்பாலும் கிருபை பாராட்டி, அவரைப் பணிகொண்டனர். அத்தேசாதிபதியையும் திருத்திச் "சடகோபதாஸர்" என்று பெயரிட்டு அவரால் ஆழ்வாருக்கு அனேக

http://acharya.org

திருப்பணிகளைச் செய்து வைத்தனர். அங்கு நின்
றும் திருக்குறுங்குடிக்குச் சென்று ஒரு பிராமண
னைத் திருத்தித் “ திருவேங்கடதாஸன் ” என்று
நாமஞ் சூட்டி, அவனால் அத்திருப்பதி நம்பிகள்
மூவருக்கும் பல திருப்பணிகளைச் செய்வித்துக்
கோயிலை யடைந்தனர்.

அந்நாளில், எறும்பியப்பா ( இவர் ஜீயர் விநி
யோகித்த பிரசாதத்தை மறுத்து அபசாரப்பட்டு,
தமது திருவாராதனமாகிற சக்ரவர்த்தித் திருமக
னால் அவர் வைபவத்தை யறிந்தவர் ), அப்பிள்ளை,
அப்புள்ளார் முதலானோர் ஜீயருக்குச் சீடராயினர்.

பின்னர், கந்தாடையண்ணன் முதலானோருக்
குக் கிருபைபண்ணி “ ஸப்த கோத்ர வ்யவஸ்தை ”
செய்தருளினர்.

பிள்ளைலோகாசாரியர் அருளிச்செய்த தத்வ
த்ரயம், ஸ்ரீவசனபூஷணம், ரஹஸ்யத்ரயம் இவற்
றிற்கும், ஆசார்ய ஹ்ருதயம், இராமாநுஜ
நூற்றந்தாதி, ஞானஸாரம், ப்ரமேயஸாரம் முதலான
வற்றிற்கும் வியாக்கியான மிட்டனர். திருவாய்
மொழி நூற்றந்தாதி, உபதேசரத்தினமாலை, ஆர்த்திப்
பிரபந்தம் முதலிய பிரபந்தங்களும், தத்வத்ரயத்
திற்கும் ஈட்டிற்கும் பிரமாணத்திரட்டும், உடையவ
ருடை நித்யமும் செய்தருளினர்.

ஸ்ரீவைஷ்ணவர் புருஷகார மின்றித் தனித்து
வந்து தமது திருவடியை யடைந்த வரந்தரும் பெரு

http://acharya.org

மாள்பிள்ளை என்பவரை உபேக்ஷித்து, ஆறுமாத காலம் சென்று புருஷகார முகத்தாலே பணிகொண்டனர்.

தமது திருவடிகளில் மிகவும் அந்தரங்கையான சடகோபக்கொற்றி யென்னும் அம்மையாருக்குத் தமது நிஜரூபத்தைச் சேவைதந்தருளினர்.

கோயிலிலே புத்தமத வாதி யொருவனை வாதால வமிசத்தரான வேடலப்பையைக் கொண்டு ஓட்டிவைத்தனர்.

அக்காலத்தில், தரிசன விரோதிகளான வாதிகளை ஜெயித்து, "ப்ரதிவாதிபயங்கரர்" என்னும் விருதையுடைய ஹஸ்திகிரிநாதரண்ணா என்பவர் திருமலையில் ஆகாச கங்கையினின்றும் திருமஞ்சனங் கொண்டுவந்து திருவேங்கடமுடையானுக்குச் சமர்ப்பித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள், கோயிலிலிருந்து அங்கு சென்றிருந்த ஸ்ரீவைஷ்ணவர் ஒருவரால் அழகியமணவாள மாமுனிகளுடைய வைபவத்தைக் கேட்டுக்கொண்டே, வாசனைத் திரவியங்களைத் தீர்த்தத்தில் சேர்ப்பதற்குத் திருத்திக்கொண்டிருக்கையில், ஓர் ஏகாங்கி திருமஞ்சனக் குடத்தைத் துரிதமாக எடுத்துக்கொண்டு போய்த் திருவாராதனத்திற்குச் சமர்ப்பித்தார். அன்று, அத்தீர்த்தம் மற்றை நாள்களைக் காட்டிலும் பரிமளம் விஞ்சியிருந்தது. அதற்குக் காரணம் ஜீயருடைய வைபவ சிரவணமே யென்றறிந்த அண்ணா அவர் திருவடிகளில் காதல் கிளர்ந்தவராய்க் கோயிலுக்குச் சென்று அவரை ஆசிரயித்தனர்.

http://acharya.org

பிறகு, ஜீயர் மீண்டுந் திவ்யதேச யாத்திரை செய்தார். அச்சமயம், பெருமாள் கோவிலில் அப்பாச்சியாரண்ணாவையும், திருமலையில் எம்பெருமானார் ஜீயரையும் தரிசனத்தை வளர்த்து வரும்படி நியமித்துவைத்தார். எறும்பியைக் கடாக்ஷித்து அதற்கு "வட திருவேங்கடம்" என்று திருநாமஞ் சாத்தி, அங்குண்டானார் எல்லாரையும் "அழகிய மணவாள தாஸர்" என்று அபிமானித்தருளினர்.

ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவுக்கு "ஸ்ரீபாஷ்யாசார்யர்" என்று திருநாமமிட்டு ஸ்ரீபாஷ்ய ப்ரவசனம் செய்துவரும்படியும் கந்தாடையண்ணனுக்கு "பகவத் ஸம்பந்தாசார்யர்" என்றும் ஸுத்தஸத்வம் அண்ணனுக்கு "திருவாய்மொழி யாசார்யர்" என்றும் திருநாமங்களிட்டு அவர்களைப் பகவத் விஷய ப்ரவசனம் செய்யும்படியும் நியமித்தருளி,

"வாது செய வென்று சில வாதியர்கள் வந்து
மனமுரிய நிற்ப ரோருபால்,
வாழியெனவே பெரிய சாபமற வென்றுசிலர்
வந்தனைகள் செய்வ ரோருபால்,
போதுமினி வாதமுன பாதமரு ளென்று
புகழ்ந்து சிலர் நிற்ப ரோருபால்,
போங்கிவரு மேங்கள்வினை மங்கவரு ளென்றுசிலர்
போற்றி செய்து நிற்ப ரோருபால்,
ஈதிவைகிடக்க மறை நூற்றமிழ் தேர்ந்துசில
ரேதமற வாழ்வ ரோருபால்,

http://acharya.org

ஏதமற வாதுலர்கள் பேதையர்க டாமயங்கி
நிறைந்திறைஞ்சி நிற்ப ரோருபால்,
மாதகவி னுலக மேழையு மளிக்கவென
வந்த வேதிராச னடிசேர்
மாமுனிவர் தீபமருளாளர் மணவாளமுனி
மன்னுமடம் வாழும் வளமே!"

என்று அனைத்துலகுங் கொண்டாடும் கீர்த்தியுடன் கோயிலில், திரண்ட பாகவத சம்பத்துடனே எழுந்தருளியிருந்தனர்.

இத்தனை வைபவத்துடன் அணியரங்கத்து உலகனைத்தும் விளங்குஞ் சோதியான நம் சுந்தர மாமுனிகளின் மகிமையைக் கண்ட ஸ்ரீரங்கநாயகரான பெருமாள் அவருக்குத் தாம் சிஷ்யராகத் திருவுள்ளங் கொண்டார்.

இப்படிப் பெருமாள் மணவாள மாமுனிகள் பக்கலில் சிஷ்யவிருத்தியை வகிக்கக் கருதிய காரணத்தை ஆராய்ந்தறிந்து பெரியோர் அருளியுள்ளதைக் கேண்மின்:

"எப்பெருமான் இராமபிரானைத் திருவவதரித்த காலத்தில், விசுவாமித்திர முனிவரை வணங்கி, அவருக்குச் சேவகனாய் நின்றான். பின்பு, அம்முனிவருடைய சரிதைகளை யறிந்து, ராஜஸரும் தாமஸருமான அவரைத் தான் ஆசாரியனைக் கொள்ளப் பெற்றமையால் குறைபடலாயிற்று.

http://acharya.org

பிறகு, குரக்கினத் தரசனான ஸுக்ரீவ மஹாராஜர் காலிலே விழுந்தான். அவர் பக்கல் அன்பும் நிலைநின் றிருந்ததில்லை. ஸுக்ரீவன் வாக்குத் தவறியதனால் இளைய பெருமாளை யனுப்பி அவனைத் தண்டிக்க நினைக்கலாயிற்று. பின்னர், கடலரசனை யடிபணிந்தான். அவன் விஷயத்திலும் சினங் கொள்ளலாயிற்று.

கிருஷ்ணாவதாரத்தில், ஸாந்தீபினி பக்கலிலே சரணம் புகுந்து கல்வி பயின்றான். அந்த ஸாந்தீபினியும் குரு காணிக்கையாக என்றைக்கோ கடலில் மாண்டுபோன தமது புதல்வனைக் கொணர்ந்து கொடுக்கும்படி வேண்டினார். இங்ஙனம் லௌகிகமான பலனை விரும்புகிற இவரை ஆசாரியராகக் கொள்ளப் பெற்றோமே யென்று அவரிடத்திலும் அப்ரீதி கொள்ளலாயினர்.

இப்படிப் பெருங்குறைவாளனான பகவான் அர்ச்சாவதாரத்திலாவது குறைதீர, சொரூப பூர்த்தியுள்ள ஒரு ஸதாசாரியனை யடைந்து வாழ்வோமென்றிருந்து, திருமலையில் எம்பெருமானாரைச் சேவிக்கப்பெற்று, அவரை ஆசிரயித்தான். அவரும், தனக்குத் திருவிலச்சினை யளிக்க "மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்ற அரங்கத் தரவினணையானை" தான் யதீந்திரருக்குச் சீடனானான். பிறகு எம்பெருமானாரானவர் எல்லோரும் நேராகத் தம்மை வந்தடைகிறார்களே யொழியத் தம்மைப் பற்றினாரைப் பற்றுகிற அதிகாரி

http://acharya.org

யாருமில்லையே எனவிருப்பர் என்பதை யறிந்து யதீந்திர ப்ரவணரானார் பக்கலிலே சிஷ்ய விருத்தி செய்யப் பெற்றிலோமே என்று அங்கும் குறைபட நேர்ந்தது.

இந்தக் கவலையுந் தீர "மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிற லயோத்தி யெம்மரசா"யும், "கோவலனாய் வெண்ணையுண்ட வாய"னையுமுள்ள அழகிய மணவாளனை திருக்கோலத்தில் ஆசாரியத்துவ பூர்த்தியும் யதீந்திர ப்ரவணமும் மிகுத்தவரான நம் மணவாள மாமுனிகள் பக்கலிலே சிஷ்யனாகப் பெற்று க்ருதார்த்தனாகக் கருதினான்" என்பதே.

பரீதாபி வருடத்தில், ஆவணி மாதத்தில், திருப்பவித்திரத் திருநாளிலே, ஸ்ரீரங்கநாதன் "நாம் அழகிய மணவாள மாமுனிக ளிடத்திலே திராவிட வேதமான நாலாயிரத் திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்களைக் கேட்க விரும்புகிறோம்; அவரைக் கருடமண்டபமான பெரிய திருமண்டபத்திலே அழைப்பியும்" என்று அர்ச்சகருக்கு நியமித்துத் தானும் திருப்பவித்திர மண்டபத்திலே யேறியருளிப் பேரோலக்கமாக வீற்றிருந்தான். ஜீயரும் தமது சீடர்களுடனே பெருமாளை மங்களாசாஸனஞ் செய்துகொண்டு எழுந்தருளி யிருக்க, பெருமாள் அவரைத் தனித்து அருளப்பாடிட்டருளி ஸ்ரீசடகோபனை ப்ரஸாதித்து "ஆழ்வாருடைய திரு

வாய்மொழிப் பொருளை நாமும் நம் அடியாரும் கேட்டு வாழும்படி நாளை முதலாக நம்முடைய பெரிய திருமண்டபத்திலே ஈடு முப்பத்தாறாயிரத் துடனே நடத்தும்'' என்று நியமித்தார். இப்படிப் பெரிய பெருமாள் நிர்ஹேதுகமாகத் தம்மை விஷயீகரித்து, அருளப்பாடிட்டுத் தம் திருவடிகளை ஊன்றுவித்து, நியமித்தருளினதற்கு ஜீயரும்,

"நாமார்? பெரியதிரு மண்டபமார் நம்பெருமாள்
தாமாக நம்மைத் தனித்தழைத்து—நீ மாறன்
செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை நாளுமிங்கே
வந்துரையென் றேவுவதே! வாய்ந்து.''

என்றுவந்து சம்மதித்தார்.

மறுநாள், பெருமாள் நாச்சிமாருடனே திவ்விய சிம்மாஸநத்திலே எழுந்தருளினார். திருவனந்தாழ்வான், பெரியதிருவடி, ஸேநாபதியாழ்வான் முதலான நித்தியரும், நம்மாழ்வாருள்ளிட்ட ஆழ்வார்கள் பதின்மரும், நாதமுனி, யதிவராசாதி ஆசாரியர்களனைவரும், ஸ்ரீரங்கநாராயண ஜீயர், திருமாலைதந்த பட்டர் தொடக்கமானோரும் அடியார் பெருங் குழுவோடு பேரோலக்கமாக எழுந்தருளினார்கள். மணவாள மாமுனிகளும் திவ்விய ஆசாரிய பீடத்தில் வீற்றிருந்து, ஈடு முதலான ஐந்து வியாக்கியானங்களுடனே திருவாய் மொழியைத் தொடங்கி ஒரு வருட பரியந்தம் நடத்தி வந்தார்.

http://acharya.org

சாத்தியருளுந் தினத்தில், திவ்வியப் பிரபந்த வைபவங்களையும், அதினுடைய வியாக்கியான வைபவங்களையும், ஜீயருடைய வைபவங்களையும் பிரகாசஞ் செய்தருள வேண்டுமென்றும் தானே யநுஷ்டித்துக் காட்டவேண்டுமென்றும் ஸ்ரீரங்க நாதன் திருவுள்ளங்கொண்டு, ஜீயருக்கு ஆசாரிய ஸம்பாவனையாகச் சில திரவியங்களும், ஏல லவங்க கற்பூராதிகளும், திருப்பரிவட்டங்களும், அடைக்காயும் பழங்களும் அமர்த்தி வைத்தான். பிறகு, தானே அழகிய மணவாள பட்டர் என்னும் அர்ச்சகருடைய குமாரனை, ஐந்து வயதுடைய, ரங்கநாயகம் என்கிற சிறுவனை வேடம் புனைந்து, ஸம்பாவனைத் தட்டுகளுக்கும் பெருமாளுக்கும் நடுவே வந்துநின்று, கைகளைக் கூப்பிக் கொண்டு

"ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்|
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்||."

என்று சொல்லி ஜீயரை வணங்கி மறைந்தான். எல்லோரும் அதியாச்சரியப்பட்டனர்; அந்தச் சுலோகத்தை எழுதி, மஞ்சள் காப்புச் சாத்தி திருவடிகளிலே சமர்ப்பித்து எடுத்து ஒரு தட்டிலே வைத்தனர். பின்பு, உண்மையான ரங்கநாயகத்தை யழைத்து விசாரித்தனர். அச்சிறுவன் தான் ஒன்றும் அறியேனென்று பயந்தோடினன். அப்போது, பெருமாள் அவனுக்கு அருளப்பாடு ஸாதித்து " நீர் வாழித்திருநாமம் ஓதும் " என்றார். அப்பிள்ளையும்,

http://acharya.org

“ வாழி திருவாய் மொழிப்பிள்ளை மாதகவால்
வாழ மணவாள மாமுனிவன்—வாழியவன்
மாறன் றிருவாய் மொழிப்பொருளை மாநிலத்தோர்
தேறும்படி யுரைக்குஞ் சீர். ”

“ செய்ய தாமரைத் தாளிணை வாழியே
சேலைவாழி திருநாபி வாழியே
தூய்ய மார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத் தோளிணை வாழியே
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணைபொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாள மாமுனி
புந்திவாழி புகழ்வாழி வாழியே. ”

“ அடியார்கள் வாழ வரங்கநகர் வாழச்
சடகோபன் றண்டமிழ்நூல் வாழக்—கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே!
இன்னுமொரு நூற்றண் டிரும்.”

என்று ஸர்வேசுவரன் தன்னைக் கருவியாக வைத்துச் சாதித்தருளின பாக்களை யோதினன் பெருமாளும் உவந்து, ரங்கநாயகத்தைக் கடாக்ஷித்து அவனுக்கும் பல வரிசைகள் தந்தருளினர்.

உடனே, திருமலை, பெருமாள்கோவில் உள்ளிட்ட சகல திவ்விய தேசங்களுக்கும் ஸ்ரீசேனை முதலியாரைக்கொண்டு திருமுகம் விடுத்து, அநுஸந்தான காலங்கள்தோறும் “ ஸ்ரீசைலேச ” தனியனைச் சொல்லித் தொடங்கும்படியும், சாற்றும்

http://acharya.org

போதும் அந்தத் தனியனைச் சொல்லியும், "வாழி திருவாய்மொழிப்பிள்ளை" என்று தொடங்கி "மணவாளமாமுனியே இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்று சொல்லி முடிக்கும்படியும் நியமனஞ் செய்தருளினர் பெருமாள்.

பிறகு, தமதாசாரியரான ஜீயருக்கு சம்பாவனை வழங்கிக்கொண்டிருக்கையில், கந்தாடையண்ணன் தேவிகள் அங்கு வந்து, ஒரு சீட்டைக் கொடுத்துத் தாம் திருமாளிகையிலே பல அம்மையார்களுடன் ஜீயருடைய வைபவத்தை அநுஸந்தித்துக்கொண்டிருக்கையில் ஒரு பிரமச்சாரி தம்மிடத்தில் அந்தச் சீட்டைக்கொடுத்து மறைந்ததாக விண்ணப்பித்தார். அதில் "ஸ்ரீசைலேச" தனியன் எழுதியிருப்பதைக் கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டு, அந்தத் தனியனின் அர்த்தத்தைத் திருமந்திரமாக அறுதியிட்டனர். வானமாமலை ராமாநுஜஜீயர், கந்தாடையண்ணன், அப்பா, அண்ணா முதலானவர்கள் ஜீயர் விஷயமாகத் தாங்கள் தொடுத்து, ஓதிவந்த தனியன்களை விடுவித்து, அன்றுமுதல் "ஸ்ரீசைலேச" தனியனை எல்லோரும் உத்தாரகமாகக் கொண்டார்கள்.

பின்னர், பெருமாள் ஆழ்வார்களுக்கு அருளப்பாடிட்டு அனுப்பியருளி, தாமும் உள்ளே எழுந்தருளினர். கோவில் பரிகரத்தாரனைவரும் சகல வரிசைகளுடன் ஜீயரை மகா வைபவத்துடன் திருவீதி ப்ரதக்ஷிணமாக மடத்திற்கு எழுந்தருளச் செய்தனர். பிறகு, சந்நிதியிலே சென்றதும், அவர்களைப்

http://acharya.org

பெருமாள் உகந்து, "ஜீயர் முப்பத்தாறாயிரப் பெருக்கர் என்னுமது கண்டோம்" என்று மிகவும் கிருபை பண்ணியருளினர். அதைக்கேட்டு அவர்களும் "வாழி திருவாய்மொழிப் பிள்ளை" என்று தொடங்கி மங்களாசாஸனம் பண்ணி,

"அடிசூடி யென்றவலமே லருமறை யாய்ந்து தொண்டர்
முடிசூடிய பெருமாள் வரயோகி முனங்குரவோர்
படிசூடு முப்பத்தாருயிரமும் பணித்தரங்க
ரடிசூடி விட்டதற்கோ வெந்தாயென்ப துன்னையுமே!"

என்று, அனைவரும் ஜீயர் வைபவத்திலே யீடுபட்டு, அவருடைய நாமங்களையுங் குணங்களையும் புகழ்ந்து, துதித்துக்கொண்டு, பாக்கியவான்களாய் வாழ்ந்திருந்தார்கள்.

## தனியனின் பதவுரை.

| | | |
|---|---|---|
| ஸ்ரீசைலேச | = | திருமலையாழ்வார் என்கிற திருவாய்மொழிப்பிள்ளையின் |
| தயா | = | திருவருளுக்கு |
| பாத்ரம் | = | பாத்திர பூதராய், |
| தீபக்த்யாதி | = | ஞானம் பக்தி முதலிய |
| குண | = | நற்குணங்களுக்கு |
| ஆர்ணவம் | = | கடல் போன்றவராய், |
| யதீந்த்ர | = | எதிராசன் பக்கலிலே |
| ப்ரவணம் | = | கனத்த அன்புடையவரான |
| ரம்ய ஜாமாதரம் முநிம் | = | கோயில் அழகியமணவாள மாமுனிகளை |
| வந்தே | = | வணங்குகின்றேன். |

என்பதாம்.

http://acharya.org

இனி, இத்தனியனுக்கு நம்முதுவர் ஆழ்ந்தறிந்து அருளியுள்ள இரகசியார்த்தம் உரைக்கப்படும்:

திராவிடவேதம், இதின் அங்க உபாங்கங்கள், இவற்றின் வியாக்கியானங்கள், இவை யனைத்தினு டைய ஸாரமான இரகசியங்கள் முதலானவைகளின் ஆதியந்தங்களிலே, அகில திவ்யதேச விலக்ஷணர்க ளாலும் இந்த "ஸ்ரீசைலேச" தனியன் அநுஸந்திக் கப்படுவதால், இது, வேதத்திற்கு ஆதியந்தமாயிருக் கும் "ஓம்" என்னும் பிரணவத்திற்கு ஒப்பாம். பிரணவத்தின் அர்த்தமாகிற பிதா புத்ர, ரக்ஷக ரக்ஷ்ய, சேஷி சேஷபூதன் என்கிற மூன்று உறவு களையும் இந்தத் தனியன் நம்மாமுனிகளிடத்தில் பிர காசிக்கச் செய்கிறது.

அ (அகாரம்), உ (உகாரம்), ம (மகாரம்) என்கிற இம்மூன்று எழுத்துக்களும் சேர்ந்த நிலையே பிரண வம். இவற்றில், அகாரம் ஈசுவரனையும், மகாரம் சேதனனையும், உகாரம் இவர்களிருவருக்கும் உண் டாயிருக்கும் ஸம்பந்தத்தையும் பிரகாசிக்கச் செய் கின்றன. "ஸ்ரீசைலேச" மந்திரத்திலும் பதங்கள் தோறும் இவ்வர்த்தத்தைக் காணலாம். எங்ஙனே யென்னில்:

ஸ்ரீசைலேச தயாபாத்ரம்.— இப்பதங்களில் "ஸ்ரீசைலேச" சப்தம் ஸர்வேசுவரனைச் சொல் லுகிறது; ஆகையால், அகாரார்த்தம். பரம், வியூ கம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை யென்

http://acharya.org

னும் ஐந்து நிலைகளையுடைய ஈசுவரனின் ஆருவது நிலையே ஆசாரியன்; ஆகையாலே, "ஸ்ரீசைலேச" பதத்தால் குறிக்கப்படும் திருவாய்மொழிப் பிள்ளை யாகிற ஆசாரியர் ஈசுவரனைச் சொல்லப்படுகின்றார். தயாபாத்ரம் என்கிற சப்தம் உகாரார்த்த மாகிற பகவதநந்யார்ஹ சேஷத்வத்தை யுடைய சேதனன் ஈசுவரன் கிருபைக்குப் பாத்திரபூதன் என்பதைச் சொல்லுவதால் மகாரார்த்தம்.

தீபக்த்யாதி குணார்ணவம்.— இப்பதங்களின் பொருள் ஞானம், பக்தி, வைராக்கியம். "தாமரை யாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு" ஞானமாகும்; "ஆதியஞ் சோதிக்கே ஆராதகாதல்" பக்தியாகும்; "உன்னித்து மற்ருெரு தெய் வம் தொழாள்" என்கை வைராக்கியமாகும். இவற் றுள் பக்தியாலே சொல்லப்படுவது பகவதடிமை; இது அகாரார்த்தம். இறைவனுடைய இணைத்தா மரைகளில் அன்புருகி நிற்பதே சொரூபம்; அதை யறிகையே ஞானம்; இது மகாரார்த்தம். தேவ தாந்தர பரித்தியாகப் பிரதானமே வைராக்கியம்; இது உகாரார்த்தம்.

யதீந்த்ர ப்ரவணம் — தங்கள் சொரூபத்தை யநுஸந்தித்துச் "செயல்தீரச் சிந்தித்திருக்" கும வர்களைத் திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆக்கி அடிமை செய்விக்கையே யதீந்த்ர ப்ரவணமாகை. இதில், தங்கள் சொரூபம் என்றது மகாரார்த்தம்;

http://acharya.org

திருமகள்கேள்வனுக்கு என்றது அகாரார்த்தம்; அடிமை செய்விக்கை என்றது உகாரார்த்தம். பகவதநங்யார்ஹ சேஷத்வம் அவனடியாரளவுமாகையே அதற்கு எல்லை நிலம், அந்தரங்க சொரூபம்.

யதீந்த்ர ப்ரவணம்.— "யதிந்த்ரர்" என்கிற திருநாமம் "ராமாநுஜ" சப்தத்தின் அஸாதாரண வாசகம். இதுவும் பிரணவார்த்தம். அதாவது, "ராம" சப்தம் அகாரார்த்தம்; "அநுஜ" சப்தம் அதைப் பற்றியிருக்கிற ஆத்மாவாகையால் மகாரார்த்தம்; அந்தப் பற்றே உகாரார்த்தம்.

வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம்.— இப்பதத்தில் உள்ள "ரம்யஜாமாத்ரு" ஸப்தம் அரங்கநகரப்பனுகிய அழகிய மணவாளனுடைய திருநாமம்; ஆதலால், அகாரார்த்தம். "முநி" சப்தம் நம்மாமுனிகளைச் சொல்லி உகாரார்த்தமாகிய பகவதநங்யார்ஹ சேஷத்வ ஞானத்தையுடைய பரமசேதனனைக் குறிப்பிடுவதால் மகாரார்த்தம்.

ஆக, இவையெல்லாவற்றாலும் "ஸ்ரீசைலேச" தனியன் பிரணவார்த்தமே யென்பது நன்கு விளங்கக் காண்கிறோம்.

இன்னும் இத்தனியனுக்கு இன்றுள்ள மகான்கள் இட்டுள்ள தேனும், பாலும், கன்னலும், அமுதுமாய வியாக்கியானத்தையும் ஈண்டு அனுபவிப்போம்:

http://acharya.org

## 1—ஸ்ரீசைலேச தயாபாத்ரம்:—

"* மாமுனிவேள்வியைக் காத்து, அவபிரத மாட்டிய வடுதிற லயோத்தியெம்மரசே! அரங்கத் தம்மா! என்கிறபடியே ஸ்ரீரங்கநாதனே ஸ்ரீராம பிரானைத் தோன்றி யிருந்தனனாதலால் அத்திருவ வதாரத்தில், சைலேச தயாபாத்ரத்தை வணங்கி யிருந்தானாயினும் ஸ்ரீசைலேச தயாபாத்ரத்தை வணங்கப்பெறவில்லை. சைலேச தயாபாத்ரம் என்று ஸுக்ரீவனைச் சொல்லி, ஸ்ரீபதத்தினால் தத் வ்யா வ்ருத்தி பண்ணுகிறது. ஸ்ரீராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில் பதினோராவது ஸர்க்கத்தினால் ஸுக்ரீவ மஹாராஜர் சைலேச தயாபாத்ர பூதர் என்பது அறியத்தக்கது.

அது எங்ஙனே யென்னில்: இங்கு, சைலமாவது ரிச்யமுக பர்வதம்; அதற்கு ஈசர் மதங்கமுனிவர். அவருடைய தயைக்கு ஸுக்ரீவன் பாத்ரமாக இருந் தனன். துந்துபியோடு போர்புரிந்த வாலியானவன் அவனது உடலை வீசியெறிந்த வளவில் அவனது வாயிலிருந்து ரக்த பிந்துக்கள் காற்றினால் தள்ளுண்டு மதங்கமாமுனியின் ஆச்ரமத்தில் போய்விழ, அது கண்டு கோபித்த அம்முனிவர், இத்தீயசெயல் செய்த வன் வாலியென்று ஞானக் கண்ணாலுணர்ந்து அவ் வாலிவிஷயத்தில் சாபமிட்டதும், அதுவே காரண மாக ஸுக்ரீவன் அம்முனிவருடைய அருளுக்கு இலக்கானதும் கொண்டு சைலேச தயாபாத்ரத்வம் ஸுக்ரீவனுக்குப் பொருந்தியது. எம்பெருமான்

http://acharya.org

அவரை யடிபணிந்திருந்தா னென்பது *ஸுக்ரீவம் சரணம்கத:* என்கிற ப்ரமாணத்திஞல் ஸித்தம். சரணம் புகுந்த விடத்தில் மனஸ்தாபமின்றிக்கே யிருக்கவேண்டுமே. ஸுக்ரீவன் விஷயபோகங்களிலே ஒருப்பட்டிருந்து குறிப்பிட்ட காலத்திலே வந்திலஞக, இளையபெருமாளை யனுப்பித் தீவ்ரதண்டம் நடத்த நினைத்தமையை வெளியிட்ட படியாலே, அந்த சைலேச தயாபாத்ரத்தினிடத்திலே முன்பு பணிந்து பின்பு வருந்தின குறைதீர இப்போது ஸ்ரீசைலேச தயாபாத்ர பூதரை வணங்கி வாழ்கின்றே னென்றதாயிற்று. திருமலையாழ்வா ரென்கிற திருவாய்மொழிப் பிள்ளையின் இன்னருளுக்கு இலக்கானவர் மாமுனிகள் என்கை.

## 2.—தீபக்த்யாதி குணர்ணவர்:—

ஸ்ரீராமஞக அவதரித்திருந்த அக்காலத்திலே ஸுக்ரீவன் காலிலே குனிந்தது போல லவணர்ணவத்தின் காலிலும் குனிந்தமை யுத்தகாண்ட ப்ரஸித்தம். *ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி* என்ற விபீஷணழ்வானுடைய வாக்கின்படி லவணர்ணவத்தை யடிபணிந்திருந்து அங்கும் மனஸ்தாபம் மிகுந்தது ஸுப்ரஸித்தம். *ஸாகரம் சோஷயிஷ்யாமி* என்று நிக்ரஹத்திலே யன்றோ ஒருப்பட்டது. அப்படியான குறைதீர அந்த லவணர்ணவத்தை விட்டு தீபக்த்யாதி குணர்ணவத்தை அடிபணிகின்றே னென்றதாயிற்று. ஞானபக்தி விரக்திகளுக்குக் கடல் மாமுனிகள்.

http://acharya.org

## 3. யதீந்த்ர ப்ரவணம்:—

யதீந்த்ரர் என்று எம்பெருமானாருக்குத் திருநாமம். *அப்பனுக்குச் சங்காழியளித்தருளும் பெருமாள்* என்று போற்றப்படுகின்ற எம்பெருமானார் எம்பார், ஆண்டான், ஆழ்வான் முதலானார்க்குத் திருவிலச்சினையளித்தது போலத் திருவேங்கடமுடையானுக்கும் திருவிலச்சினை யளித்ததாக இதிஹாஸமாகையாலே *பந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்ற அரங்கத்தரவினணையான்* யதீந்த்ரரிடத்திலும் சிஷ்யவ்ருத்தி கொண்டிருந்தானாயிற்று. இராமாநுச நூற்றந்தாதியிலே *தன்னையுற்றாட்செய்யுந் தன்மையினோர்* என்கிற பாசுரத்தைத் திருச்செவி சாத்தின பிறகு, யதீந்த்ரரிடத்திலே சிஷ்யவ்ருத்தி செய்வதிற் காட்டிலும் யதீந்த்ர ப்ரவணரானார் பக்கலிலே சிஷ்யவ்ருத்தி செய்வதே சிறந்தது என்று தேறினபடியாலே இப்போது யதீந்த்ர ப்ரவணரை அடிபணிகின்றமை மிகவும் பொருந்தும்.

## 4.— ரம்ய ஜாமாதரம் முநிம்:—

ராமாவதாரத்தில் விச்வாமித்ர முனிவன் பக்கலிலும், க்ருஷ்ணவதாரத்தில் ஸாந்தீபினி முனிவன் பக்கலிலும் சிஷ்யவ்ருத்தி செய்திருந்து அவர்களிடத்திலே ஸம்ஸாரித்வ பூர்த்தியையே கண்டு திருவுள்ளம் நொந்திருந்தபடியாலே அக்குறைதீர, வ்ரக்தாக்ரேஸரரான மணவாள மாமுனிகளை அடிபணிந்தேன் என்கை.''

[ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசார்யர் அருளியவை]

http://acharya.org

இந்தத் தனியனுக்குண்டான அதிசயங்கள் பல. இதைத் திருமாலிருஞ் சோலைமலை அழகரும் திருவேங்கடத் தப்பனும் பரவச் செய்தார்கள். எங்ஙனே யென்னில்:

அக்காலத்தில், ஒரு முமுக்ஷு தீர்த்த யாத்திரை செய்து கொண்டிருந்தனர். அவரை வாழ்விக்கத் திருவுள்ளம்பற்றிய ஸர்வேசுவரன், அவர் கனவிலே தோன்றி, "ஸ்ரீசைலேச" தனியனை உபதேசித்தான். அவரும் அதையே தஞ்சமாகக் கொண்டார். ஒருகால், அவர் திருமலைக்குச் சென்று, திருப்புரட்டாசித் திருநாள் சேவிக்கும் பொழுது, பெருமாள் அவரைத் திருவோலக்கத்திலே ஸ்ரீவைஷ்ணவர்கள் நடுவேயிட்டு, "அவர்கள் அருளிச் செய்வதைக் கேள்" என்றும், ஸ்ரீவைஷ்ணவர்களிடத்தில் "இவர்" சொல்லுவதைக் கேளுங்கோள்" என்றும் நியமித்தார். அப்போது ஸேனை முதலியார் திருமுகப்படி நடத்தி வருகிற "ஸ்ரீசைலேச" தனியனை பெரிய கேள்வி ஜீயர் தொடங்கினார். உடனே முமுக்ஷு தண்டனிட்டு "எனக்குக் கனவில் கிடைத்த தனியனையே ஸ்வாமிகள் அநுஸந்திப்பது என்ன ஆச்சரியம்!" என்று அந்த சுலோகத்தைச் சொல்லிக் காண்பித்தார். எல்லோரும் வியந்து, அந்தத் தனியனுடைய ப்ரபாவத்தையும் அது தங்களுக்குநியமிக்கப்பட்டவரலாற்றையும் அவருக்கு அறிவித்தனர். முமுக்ஷுவும் அதிப்ரவணராய்க்

http://acharya.org

கோயிலிலே சென்று, ஜீயர் திருவடிகளிலே வேரற்ற மரம்போல் விழுந்தார். பரம தயாளுவான அவரும் முமுக்ஷுவை வாரியெடுத்து, விருத்தாந்தங்களை விசாரித்தறிந்து, "இப்படி பகவத் கடாக்ஷ பூதனோ நீ?" என்று உகந்து, அபிமானித்து, இனி உமக்கு வேண்டுவது என் என்று வினவினார். அப்போது அவர் "மோக்ஷத்தை எளிதில் தரவல்ல மந்திரமாகிற "ஸ்ரீசைலேச" தனியனையும் மந்திரத்தை யருளிய ஆசாரிய ரூபியான அப்பனையும், மந்திரத்தால் சொல்லப்படுகிற தேவதையான தேவரீர் திருவடிகளையும் திடமாகப் பற்றி முக்தனானேன்; இனி வேண்டுவதுண்டோ?" என்றருளி கைதட்டிச் சிரித்துக் கூத்தாடி நின்றார், ஜீயரும்.

மந்த்ரே தத் தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ|
த்ரிஷு பக்திஸ் ஸதா கார்யா ஸாஹி ப்ரதம ஸாதநம்||"

(இ-ள்:—மந்திரத்தினிடத்திலும், அதனுடைய தெய்வத்தினிடத்திலும், மந்திரத்தை யுபதேசித்த ஆசாரியனிடத்திலும் பக்தி எப்போதும் செய்யத்தக்கது. அந்த பக்தி முதலாவது ஸாதநமன்றோ? என்பதாம்) என்னுமது இவருக் குண்டாயிருக்கிறதே! அதிகார பூர்த்திக்கு வேண்டுவதும் இதுவேயன்றோ? என்று உகந்து, அவர்க்குப் பஞ்ச சம்ஸ்காரங்களையும் செய்வித்து "திருவேங்கட ராமாநுஜ தாஸர்" என்று தாஸ்யநாமமிட்டுக் கிருபைசெய்தருளினார். பெருமாளும் அவருக்கு மேல்வீடு தந்தார். இதைக் கண்ட எல்லோரும் ஜீயருடைய மகிமையைப் போற்றி மகிழ்ந்தனர்.

http://acharya.org

மணவாள மாமுனிகளின் ஸம்பந்தமுடைய ஜீயர் ஒருவர் அழகர் திருமலையிலே சமஸ்தவித கைங்கரியங்களையும் செய்துகொண்டு வாழ்ந்துவந்தார். அவர் தமக்கு நித்திய அநுஸந்தேயமாக ஜீயர் விஷயமான ஒரு தனியன பெரியோரிடமிருந்து உண்டாகவேண்டும் என்று பெருமாளைப் பிரார்த்தித்து வருவர்.

இப்படிக்கிருக்க, மணவாள மாமுனிகளின் சிடர்களில் சேனைமுதலியார் என்றொருவர் இருந்தார். அவர் " ஸ்ரீசைலேச " தனியன் விஷயத்தையே யறியாதவர். அது அவதரித்த காலத்தில் திவ்விய தேச யாத்திரைக்குச் சென்றிருந்ததால். அவர் தெற்குத் திருப்பதிகளெல்லாம் சேவித்து, அழகரை வணங்க அங்கு வந்தார். அழகரும் அவருக்குத் தீர்த்தம் முதலான வரிசைகள் வழங்கி, ஸ்ரீசடகோபனை அவர் திருமுடியிலே நன்கு தரிக்கவைத்து, " உமதாசாரியன் விஷயமான ஒரு தனியனைச் சொல்லும்" என்று நியமித்தார். அவரும் " ஸ்ரீசைலேச " மந்திரத்தை அருளிச்செய்தார். அதைக் கேட்டிருந்த அர்ச்சகரும் அந்தத் தனியனை ஜீயருக்கு உபகரித்தார். பின்பு, சேனைமுதலியாருக்கும் அர்ச்சகருக்கும் அந்த மந்திரம் தெரியாமல் போயிற்று. அவர்கள் ஜீயர் மடத்திற்குச் சென்று, சுலோகத்தை யருளிச்செய்யும்படி ஜீயரை ப்பார்த்தித்தனர். அதற்கவர் " அருளிய நீரே கேட்பதேன்? " என்று வினவினார். சேனைமுதலியார் தனக்கொன்

றும் தெரியாதென்றும், அதை அழகரே தம்மைக் கருவியாகக்கொண்டு அருளியுள்ளனர் என்றும் தெரிவித்துத் தனியனைப் பெற்று தீவிரமாகக் கோயிலுக்குச் சென்று, மிக்க ஆர்வத்துடன் ஜீயரைப் பணிந்து, இந்த வைபவமெல்லாம் விண்ணப்பித்தார். அனைவரும் ஆச்சரியமுற்றனர்.

பதரிகாசிரமத்தில் அயோத்யை ராமாநுஜ அய்யங்கார் என்பவர் ஒருவர் பெருமாளை ஆராதித்து வந்தனர். அவர் பக்தியில் மிகச் சிறந்தவர். கோயிலில், ஸ்ரீ மணவாள மாமுனிகள் ஈடு சாற்றிய நாள் இரவில், பதரிகாசிரம நாராயணன் அவரது கனவில் தோன்றி "ஸ்ரீசைலேச" தனியனைக் கற்பித்து, காலை மாலைகளிலே அதை முதலில் ஓதிப் பிரபந்தாநுஸந்தானம் செய்யும்படி நியமித்தருளினர். அதன்படியே ராமாநுஜ அய்யங்காரும் நடத்தி வந்தனர்.

இஃதிங்ஙனமிருக்க, ஜீயர் வடதிருப்பதிகளைச் சேவிக்கப் பேராவல் கொண்டு சோகித்திருந்ததைத் தாமொருவரே யறிந்து, அதைப் பூர்த்தி செய்து வைப்பதாகப் பிரார்த்தித்து அநுமதிகொண்ட ராமாநுஜதாஸர் என்பவர், ஜீயரால் தமக்கு வழித்துணையாக நியமித்தனுப்பப்பட்ட குமாண்டூர் இளையாழ்வார் பிள்ளையுடன், அந்தத் திவ்யதேசங்களை முறையே சேவித்துக்கொண்டு பதரிகாசிரமத்தை யடைந்தனர். அவர்கள் இருவரும் நரநாராயணப் பெருமாளை மங்களாசாஸனம் செய்யத் தொடங்கு

http://acharya.org

கையில் பெருமாள் அர்ச்சகரிடத்தில் "இவர்கள் அழகியமணவாள மாமுனிகளுடைய ஸந்நிதியின் றும் அவருடைய மரியாதையாக எழுந்தருளினவர்கள்; இவர்களைத் திருவோலக்கத்திலே அருளிச்செயலை அநுஸந்திக்கச் செய்யும்," என்று நியமித்தார். அதன்படியே அவர்களும் வீற்றிருந்து "ஸ்ரீசைலேச" மந்திரத்தை முதலில் ஓதிப்ரபந்தாநுஸந்தானம் செய்தார்கள். அதைக் கேட்டிருந்த ராமாநுஜ அப்பங்கார், தமக்கு மிக்க இரகசியமாகப் பதரி நாராயணனால் கனவில் அருளப்பெற்ற அம்மந்திரம் அவர்களுக்கு எவ்வாறு கிடைத்ததென்று ஆச்சரிய முற்று, அதன் வைபவாதிசயம் அனைத்தும் அவர்களை விசாரித்தறிந்தார். பிறகு, அந்த மந்திரமும் வாழித்திருநாமங்களும் அவதரித்த காலத்தை அவர்களிடம் கேட்டார். அவர்களும்,

" நல்லதோர் பரிதாபி வருடந் தன்னில்
நலமான வாவணியின் முப்பத் தோன்றில்
சொல்லரிய சோதியுடன் விளங்கும் வெள்ளித்
தொல்கிழமை வளர்பக்க நாலா நாளில்
செல்வமிகு பெரிய திருமண்ட பத்திற்
செழுந்திருவாய் மொழிப் பொருளைச் செப்புமென்று
வல்லியுறை மணவாள ரரங்கர் நங்கண்
மணவாள மாமுனிக்கு வழங்கினரே."

என்றார்,

http://acharya.org

"ஆனந்த வருடத்திற் கீழ்மை யாண்டி
லழகான வானிதனின் மூலநாளில்
பானுவாரங் கொண்ட பகலிற் செய்ய
பேரணை யினுளிட்டுப் பொருந்திவைத்தே
ஆனந்த மயமான மண்டபத்தி
லழகாக மணவாள ரீடுசாற்ற
வானவரும் நீரிட்ட வழக்கே யென்ன
மணவாள மாமுனிகள் களித்திட்டாரே."

என்றும் அருளிச்செய்தனர். அதைக்கேட்ட ராமாநுஜ அய்யங்காரும் அற்றைநாள் இரவில்தானே ப்நாராயணப் பெருமாள் அந்தத் தனியனைத் தமக்கு கனவில் உபதேசித்த விருத்தாந்தத்தை விண்ணபித்து ஆனந்த பரவசரானார். பிறகு, இளையாழ்வார் பிள்ளையினால் மணவாள மாமுனிகளின் வைபவம் முற்றும் அறிந்து, அவரைச் சேவிக்கப் பேராவல் கொண்டு புறப்பட்டு வருகையில், திருமலையிலே திருவேங்கடமுடையான் அய்யங்காருக்குச் சில கைங்கரியங்களை நியமித்து அங்கேயே அவரை நிறுத்திக் கொண்டான்.

திவ்விய தேச யாத்திரையிலிருந்து திரும்பிவந்த இளையாழ்வார் பிள்ளையால் வரலாற்றை யறிந்த ஜீயரும் மிகவும் உகந்து, கந்தாடையண்ணனைத் திருமலைக் கெழுந்தருளவிட்டு ராமாநுஜ அய்யங்காரை அவரது திருவடிகளுக்கு அனுக்கராக்கிக் கடாக்ஷித்தருளினர்.

http://acharya.org

இன்னும் இந்த "ஸ்ரீ சைலேச" மகாமந்திரத்திற்கு உண்டான வைபவத்தை அளவிட்டுச் சொல்ல இசைதயருளிய அழகிய மணவாளனுக்கும் அரிதேயாம்.

ஆக, இவ்வியாசத்தால், "ஸ்ரீ சைலேச தயாபாத்ர" மந்திரத்தின் பொருளையும், அதனால் சொல்லப்படுகிற தேவதையையும், அது யாரால், எக் காலத்தில், எச்சமயத்தில், எந்நிமித்தமாக அருளிச் செய்யப்பட்டது என்பதையும் தெளிவாக அறிந்தோம். இந்த மந்திரத்தின் தேவதையான நம் கோயில் அழகிய மணவாள மாமுனிகளின் மகாத்மியத்தைப் பின்னும் ஒரு சிறிது அனுபவிப்போமாக:

"ஸ்ரீமந் நாதமுனிகள், எம்பெருமானார், ஆழ்வான், பட்டர், நம்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர், திருவாய்மொழிப்பிள்ளை முதலான ஆசாரியர்களுக்கும் இந்தப் பெருமைகள் பெரும்பாலும் இருந்தாலும், அன்னவர்களில் ஒருவருடைய தனியனும் இத்தகைய கௌரவம் பெறவில்லை. விலக்ஷணமான ஒரு பகவந்நியமன விசேஷத்தினால் நமது மணவாள மாமுனிகளுடைய தனியனுக்கும் வாழித் திருநாமத்திற்கும் மட்டுமே இத்தகைய பெருமை யேற்பட்டது." ஆகையால், நம் மாமுனிகளின் ஏற்றத்தை, வாசகர்களே! நீங்களே அளவிட்டுணர்வீர்களாக.

http://acharya.org

ஏரார் பெரும்பூதூரிலே எம்பெருமானார் வடமொழியையும் தென்மொழியையும் வெளியிட அவதரித்தருளினார்; "நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது; தென்குருகை வள்ளல் வாட்டமில்லா வண்தமிழ் மறை வாழ்ந்தது."

"அரங்க நகரும் மேவு திருநகரியும் வாழவந்த மணவாள மாமுனி" என்கிறபடியே, தென்னாட்டுத் திலதமான தென்குருகூரிலே ஜீயர் தென்மொழியை வெளியிடவே அவதரித்தருளினார். "விரவு தமிழ் மறைமொழியும் வடமொழியும் வெளியாகச் செய்யும் விசித்திர வியாக்கியான சேஷன்" என்றபடி, இவருக்கு இரண்டு வேதங்களிலும் சிறந்த பாண்டித்தியம் உண்டாயிருந்தும், இவர் ஊற்றமெல்லாம் தமிழ்மறை ஒன்றில் தான் நிலைநின்றது, இவர் "தமிழ் மறைகளாயிரமும்...மொய்ம்பால் வளர்த்த இதத்தாயாகிய இராமாநுச"ருடைய புனரவதார மாகையாலே. தீர்க்க சரணாகதி யென்னும் திருவாய் மொழிக்குச் சடகோபன் போலே இராமாநுசனுக்கு மணவாள மாமுனிகள்.

எம்பெருமானார் "எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும்" பொருள் சுரந்தார். மணவாள மாமுனிகளோ "பல்லுயிர்க்கும் விண்ணின் தலைநின்று வீடளிப்பான் அனைத்துலகும் வாழப்

http://acharya.org

பிறந்த எதிராச மாமுனிவன்" என்னும் அர்த்தத்தை அருள் சுரந்தார். இராமாநுச முனியாம் செய்ய குன்றில் ஏற்றிய தீபமே நம்மாமுனிகள்.

நரநாராயண அவதாரம் போலவே இவர்கள் இருவருடைய அவதாரமும். எம்பெருமானார் நாராயண வைபவ ப்ரகாசர்; மாமுனிகள் இராமாநுச வைபவ ப்ரகாசர்.

"பிறப்பா யொளிவரு"என்கிறபடியே, ராமாநுசாவதாரத்தைவிட மாமுனிக ளவதாரத்திற்கு ஏற்றமுண்டு. "நாராயண" வென்கிற நான் கெழுத்து மந்திரத்தைப் பற்றி யிருப்பது (அதாவது ஈசுவரனைப்பற்றி யிருப்பது) முதல் நிலை. "ராமாநுச" வென்கிற மந்திரத்தைப் பற்றியிருப்பது (அதாவது அடியாரைப் பற்றி யிருப்பது) தேர்ந்த நிலை, அதாவது முடிவான நிலை. நம் மாமுனிகள் சதுரரில் பிரதானர் ஆகையால், "ராமாநுச" மந்திரத்திலே நிலை நின்றார். ஆதலால், "ஏத்தி யிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தி யிருப்பார் தவம்" என்றபடி, ஆழ்வாருக்கு மதுரகவிகளிலும் சரமமான திருவடிகள் ராமாநுச னைப்போலே, அந்த ராமாநுசற்குக் கூரத்தாழ்வானிலும் சரமமான சரணங்களாவர் யதீந்த்ரப்ரவணர்.

ஆகையால், மணவாள மாமுனிகளிடத்திலே அசூயை கொள்வாரும் ஒருவருண்டாகில் அவர் எம்பெருமானாருக்கு விஷமிட்ட குருத்ரோகிகளை யொப்பர்.

http://acharya.org

"பூதூரில் வந்துதித்த புண்ணியனோ? பூங்கமழும்
தாதாரு மகிழ் மாறன் தானிவனோ?—நாதார
வந்த நெடுமாலோ? மணவாள மாமுனிவ
னெந்தை யிவர் மூவரிலு மியார்?

என்கிற நிரதிசய ஞானனந்த யுக்தராய், "குன்ற மெடுத்தானடிசே ரிராமாநுசன் றாள்பிடித்தார்" (இ-ள்:— குன்றமெடுத்தானடி: ஸ்ரீ சடகோபர்; அவர் பாதங்களைச் சேர்ந்தவர் ராமாநுசன்; அந்த ராமாநுசன்றாள் மணவாள மாமுனிகள் என்பதாம்) என்கிறபடியே, ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளில் பேராத பெருங்காதலுடையவராய் வணங்கி உஜ்ஜீவிக்கும் ப்ராப்த முடைமையே ராமாநுச தரிசன சம்பந்த முடைமையாம். அஃதின்றேல் ராமாநுச தரிசனத்தில் அந்வயமே இல்லையாய்விடும். "எம்பெருமானார் தரிசன மென்றே யிதற்கு நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்து" உபய விபூதி ஐசுவரித்தையும் ராமாநுசனுக்கும் ராமாநுச முடையார்க்குமே ஆக்கி வைத்தார் ஆகலால், அந்தத் தரிசனத்தில் அந்வயம் இல்லையாயின் இம்மை மறுமைப் பேறுகள் இல்லையாய்விடும். ஜந்மம் பாழாம். இன்னுங் காண்மின்:

[" ஓம் நமோ நாராயணாய வென்று ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்திப்பதில் ஓம் என்பது அ, உ, ம, என்ற மூன்றெழுத்துக்களின் கூட்டம் (அ-ஆ, ஒரினம்). ஆ என்றது ஆழ்வார் திருவடிகளே சரணம் என்றபடி; உ-என்றது உடையவர் திருவடிகளே

http://acharya.org

சரணம் என்றபடி; ம-என்றது மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம் என்றபடி என்று சிங்கப்பிரான் பணித்துப் போருவதொரு பரமார்த்தம்.''

இதை யுன்னுங்கால், திருவஷ்டாக்ஷர மகாமந்திரத்தில் அதிகாரிகளாய் ஸத் ஸம்ப்ரதாயத் துறையிலே படிந்தவர்கள் அனைவரும் "ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்" என்றநுஸந்தித்து வருகிறார்கள் என்பது தேறப்படும். ஆகையால், "ஜீயர் திருவடிகளே சரணம்" என்றநுஸந்திக்கப்ராப்த மற்ற வைணவர்கள் அனைவரும் பிரணவத்தின் மூன்றாவது பதமான மகாரத்தில் அந்வயமொழிந்தவர் ஆகின்றனர்; மகாரத்தில் அந்வயம் ஒழியவே மகாரத்தால் சொல்லப்படுகிற ஆத்ம சொரூபத்தையே அறியாதவ ராகின்றனர்; அதனடியாக சொரூப ப்ரயுக்தமான கைங்கரிய ப்ராப்தியை யிழந்து அனர்த்தப்படுபவர் ஆவர்.

இதனால், மணவாள மாமுனிகளை வணங்குமவர்களே சொரூப சித்தி பெற்று, சொரூபாநுரூபமான நித்திய கைங்கரியமாகிற பேற்றை யெய்துமவர்கள் என்பதும், அல்லாதார் சொரூபம் அழிந்து பலபடியாலும் அனர்த்தப்படுமவர்கள் என்பதும் நிச்சயமாகின்றன.

மணவாள மாமுனிகளை வணங்கினால்தான் பேறு பெறலாம் என்பதை நமக்கு விளக்கியருள வேண்டியேதான், இறைவன் அவரை வணங்கியதும், அவரை வணங்குவதற்கு யோக்கியமாய், மிக்க சீர்மை

http://acharya.org

யுடையதான "ஸ்ரீ சைலேச" மகா மந்திரத்தை யருளியதும். ஆகையால், நாம் கோயில் அழகிய மணவாள மாமுனிகளை அநுதினமும் துதி செய்து வாழ்வோமாக:

"ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்|
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||."

"தென்கலையாம் தமிழ்வேதச் சீர்சைலத் தனியனெனும்
நன்கலையை யுள்கசிந்து நவிற்றுபெருந்தகை மாந்தர்
மின்கலையும் புரிநூலு மேனேக்கு புண்டரமும்
தென்கலையும் வடகலையுந் திகழ்நாவ ராகுவரே."

" இப்புவியி லரங்கேசற் கீடளித்தான் வாழியே!
எழில்திருவாய் மொழிப்பிள்ளை யிணையடியோன்
வாழியே!
ஐப்பிசியில் திருமூலத் தவதரித்தான் வாழியே!
அரவரசப் பெருஞ்சோதி யனந்த னென்றும்வாழியே!
எப்பொழுதும் சீசைலமேத்தவந்தோன் வாழியே!
ஏராரு மெதிராச ரெனவுதித்தான் வாழியே!
முப்புரிநூல் மணிவடம் முக்கோல்தரித்தான் வாழியே!
மூதரிவன் மணவாள மாமுனிவன் வாழியே!

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆசாரியன் திருவடிகளே சரணம்.

முற்றும்.

http://acharya.org